பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 16 ஞாயிற்றுக்கிழமை (29-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 123

# பூநகரி அருகே 9 காவல் அரண்கள் புலிகளின் தாக்குதலில் வீழ்ந்தன!

## அதிகாரி உட்பட 7 படையினர் பலி ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 29

பூநகரி—கறுக்காய்த்தீவு கடற்கரையோரம் அமைந்திருந்த ஒன்பது இராணுவக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை நடத்திய அதிரடித் தாக்குதலில் அந்த ஒன்பது காவலரண்களும் புலிகள் வசம் வீழ்ந்தன.

சுமார் முப்பது நிமிட நேரம் இடம்பெற்ற இத் தாக்குதலில் ஓர் இராணுவ அதிகாரி உட்பட ஏழு படையினர் உயிரிழந்தனர். காவலரண்களில் இருந்த மேலும் பல இராணுவத்தினர் காயங்களுடன் தப்பி ஓடினர். அவர்களிடம் இருந்து ஏழு நவீனரகத் துப்பாக்கிகள் உட்பட பல இராணுவத் தளபாடங்களை புலிகள் கைப்பற்றினர்.

நேற்று அதிகாலை 2.15 மணியளவில் நடத்தப்பட்ட இந்த அதிவேகத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் மேஜர் விவேகன் அல்லது அர்ஜுன் [சூசைப்பிள்ளை இன்பகுமார்—வங்காலை], கப்டன் நிதிகரன் அல்லது அல்பேர்ட் [சின்னராசா ஜீவகன் — மட்டக்களப்பு] ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

இந்தத் தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவரும் நான்கு இராணுவத்தினரும் கடற்படையினர் இருவரும் உயிரிழந்தனர் என ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-5-10-15]

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

கறுக்காய்த் தீவுப் பகுதியில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதல் சம்பவத்தின் போது புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ரி-56 ரகத் துப்பாக்கிகள் | — | 5 |
| ★ ரி-81 ரகத் துப்பாக்கி | — | 1 |
| ★ 203 ரகத் துப்பாக்கி | — | 1 |
| ★ ரி-56 ரக மகஸீன்கள் | — | 10 |
| ★ ரி-81 ரக மகஸீன்கள் | — | 6 |
| ★ 203 துப்பாக்கி ஷெல்கள் | — | 22 |
| ★ ஏ.கே.எல்.எம்.ஜி மகஸீன்கள் | — | 1 |
| ★ தொடர் ரவைகள் | — | 180 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 1,800 |
| ★ தொலைத் தொடர்பு கருவி | — | 1 |
| ★ தொலை நோக்கி | — | 1 |

(உ-5)

## எயிட்ஸ் நோய்க்கு தடுப்பூசி கண்டுபிடிக்கும் வாய்ப்பு!

### குரங்கில் சோதனை வெற்றி

வாஷிங்டன், மார்ச் 29

மனிதருக்கு ''எயிட்ஸ்'' நோயை உண்டாக்கும் ''எச். ஐ. வி.'' வைரசுக்கு எதிரான தடுப்பூசி ஒன்றைக் கண்டுபிடிக்கும் சாத்தியம் உருவாகக்கூடும் என்ற நம்பிக்கை அமெரிக்காவின் தேசிய விஞ்ஞான அக்கடமியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களுக்கு இப்போது பிறந்திருக்கிறது.

அதற்குக் காரணம் உண்டு! குரங்குகளுக்கு ''எயிட்ஸ்'' நோயை உண்டாக்கும் ''எஸ். ஐ. வி.'' வைரசுக்கு எதிரான தடுப்பூசி ஒன்றை ஒலோ அரச பல்கலைக்கழகத்தை சேர்ந்த

[6ஆம் பக்கம் பார்க்க]

## 5 ஆயிரம் ஈழ தமிழ் அகதிகள் விமானம் மூலம் திரும்புவர்

தமிழ்நாட்டிலிருந்து சுமார் 5 ஆயிரம் ஈழத் தமிழ் அகதிகள் விமானம் மூலம் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட விருக்கின்றனர்.

இதுபற்றி மத்திய அரசு அதிகாரிகளுடன் தாம் பேச்சு நடத்தவிருப்பதாக தமிழக வருவாய், நிர்வாக, அகதிகள் மறுவாழ்வுத்துறை சிறப்பு ஆணையாளர் சி. என். இராம்தாஸ் தெரிவித்தார்.

தற்சமயம் இவர்களைக் கப்பல் மூலம் அனுப்ப போதிய வசதிகள் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். [உ-10]

## புலிகளுக்கு தடைவிதிப்பதா? இன்னும் ஒருவாரத்தில் முடிவு

### டில்லியில் சவான் தகவல்

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது குறித்து இந்திய அரசு இன்னும் ஒரு வார காலத்துக்குள் முடிவெடுக்கும்.

இந்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் நேற்று புதுடில்லியில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தற்போது அமைச்சரவையின் பரிசீலனையில் இருப்பதாகவும் அவர் கூறினார். [இ-10]

### காரைக்காலில் பிடிபட்ட

## கப்பல் ஊழியரின் மனுவை நீதிமன்றம் நிராகரித்தது!

இந்தியாவின் காரைக்கால் அருகிலுள்ள கடற்பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கைப்பற்றப்பட்ட ''டொங்கோவா'' கப்பலின் பணியாளர்கள், தங்களை விசாரிக்க சென்னையிலுள்ள விசேட நீதிமன்றுக்கு அதிகாரமில்லை என்று தெரிவித்து தாக்கல் செய்த மனுவை அந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்திய கடல் எல்லைப் பகுதியில் ''தடா'' சட்டத்தின் கீழ் புரியப்படும் குற்றங்கள் அனைத்தையும் விசாரிக்க தமது நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு என்று மனுவை விசாரித்த சிறப்பு நீதிமன்றத்தின் மேலதிக நீதிபதி எம். சௌந்தரபாண்டியன் தீர்ப்பளித்தார்.

இந்த கப்பலில் இருந்த 10 பணியாளர்கள் ஆயுதங்கள் கடத்த முயன்றார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைதாகினர் என்பது தெரிந்ததே. (உ-த)

### இந்திய மீனவர் மீதான தாக்குதல்:

## இலங்கையின் சமாதானத்தை இந்தியா ஏற்கவில்லை!

புதுடில்லி, மார்ச் 29

கச்சதீவுக்கு அருகே தமிழக மீனவர்களின் படகுகளை இலங்கைக் கடற்படை தாக்கவில்லை என்று இலங்கை அரசு கூறியிருப்பதை இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் புதுடில்லியில் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 16ஆம் திகதியன்று இந்திய மீனவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய இலங்கைக் கடற்படைப் படகில் அச்சமயம் ஏழு பேர் இருந்தார்கள் என்று தங்களுக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 15 ஆயிரம் ஆசிரியர்கள் நியமனம்

கொழும்பு, மார்ச். 29

அரசாங்கப் பாடசாலைகளுக்கு மேலும் 15 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

கல்வி, உயர் கல்வி அமைச்சராகவும் இருக்கும் ஜனாதிபதி பிரேமதாஸாவின் சிபார்சின் பேரில் இந்நியமனங்கள் வழங்கப்பட இருப்பதாக அமைச்சின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. (உ-த)

## கொழும்பில் தண்ணீர் தேடி அலைச்சல்!

கொழும்பு, மார்ச், 29

கொழும்பில் தண்ணீருக்காக மக்கள் இரவிரவாக அலைந்து திரிவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

வெள்ளவத்தைப் பகுதியின் சில இடங்களில் 3 நாட்களாக குழாய் நீர்விநியோகம் தடைப்பட்டுள்ளது என்றும்—காலி வீதிக்கு கிழக்கே வசிக்கும் குடியிருப்பாளர்களே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-த]

### முச்சந்தி மாரி



இல்லை... இருக்கிற ஆசிரி[illegible] சம் பளம் இன்னும் குடுக்க யில்லை......!

## நாடாளுமன்றைக் கலைக்க கோரி எதிரணி பிரேரணை

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தைக் கோரும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

உத்தேசப் பிரேரணையைக் கொண்டு வருவது சம்பந்தமாக இப்போது எதிர்க்கட்சிகளிடையே கலந்தாலோசனைகளும், பேச்சுவார்த்தைகளும் நடைபெற்று வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் பல எதிர்க் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்களும் சந்தித்தனர் என்றும், அங்கு வைத்தே நாடாளுமன்றத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளுக்கு வெற்றி வேண்டி நாளை பாதயாத்திரை

### அச்சுவேலியில் ஆரம்பம்

தமிழீழ மண்ணை மீட்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்கு ஆத்மீக உந்துதலும், வெற்றியும் கிடைக்க வேண்டி அச்சுவேலியில் இருந்து மட்டுவில் வரை நாளை திங்கட்கிழமை பாதயாத்திரை ஒன்று நடைபெறவுள்ளது.

அச்சுவேலி—பத்தமேனி தீர்த்தாங்குள விநாயகர் ஆலயத்திலிருந்து நாளை அதிகாலை ஐந்து மணிக்குப் புறப்படும் பாதயாத்திரை புத்தூர் வழியாகச் சென்று மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலைச் சென்றடையும்.

தீர்த்தாங்குள விநாயகர் ஆலய பரிபாலன சபையினரும், பஜனைச் சபையினரும் சேர்ந்து இந்தப் பத்து மைல் பாத யாத்திரையை ஒழுங்கு செய்துள்ளனர். இதில் பெருமெண்ணிக்கையான பொதுமக்கள் கலந்து கொள்ள ஏற்பாடாகி உள்ளது. [அ-154]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

உழுந்துஉடைக்கும்மெஷின் விற்பனைக்கு உண்டு. க. கெங்காதரன் சாமியன் அரசடி, கரவெட்டி மத்தி, கரவெட்டி. [20271]

பழைய பத்திரிகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் விற்பனைக்குண்டு. மொத்தமாக எடுப்பவர்களுக்கு கழிவுண்டு. நூலாசிரியர் சத்தியதாஸனின் புதுவருட பலன்களும் விற்பனைக்குண்டு, கனகா ரேடேர்ஸ், திருநெல்வேலி சந்தி. [20241]

## விற்பனையாகின்றது

ஏப்ரலில் நடைபெறவிருக்கும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான, துரித மீட்டல் வினா-விடைப்பயிற்சிகள் கணிதம் 5 வினாத்தாள்கள், தமிழ் 5 வினாத்தாள்கள். ஆக்கம்: திருமதி ப. இளங்கோ. [உடுவில் மகளிர் கல்லூரி] வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [சி/1742]

## மணமகள் தேவை

யாழ். இந்து, சொந்த இடம் யாழ் நகர். 28 வயது உதயத்துச் செவ்வாய், நட்சத்திரம்: உத்தரம், இங்கிலாந்தில் வீசாவுடன் படித்துக்கொண்டிருப்பவருக்கு நற்குணமுடைய, அழகான, A/L படித்த, உயரம் 5 அடி 1அங்குலத்திற்கு உட்பட்ட மணப்பெண் தேவை. உடன் முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இங்கிலாந்தில் உள்ள பெண்களும் விண்ணப்பிக்கலாம். 395, C/o உதயன். [20254]

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் தொழில் புரியும் யாழ்ப்பாணம் இந்து 37 வயது ஆணுக்கு 32 வயதுக்குட்பட்ட அழகிய, படித்த மணமகள் தேவை. சகல விவரங்களுடன் தொடர்பு: 396, C/o உதயன், யாழ்ப்பாணம். [20270]

## மணப் பெண்கள் தேவை

செவ்வாய்க் குற்றமுள்ள 39 வயது அரச உத்தியோகத்தருக்கும், 30 வயது Computer என்ஜினியருக்கும் குற்றமற்ற 27 வயது சைவ போசன சுவிஸ் மணமகனுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [20264]

## அம்பாள் திருமண சேவை

டாக்டர்களுக்கும், I. C. M. A., B. Sc., B.A. ஆசிரியர்களுக்கும், வங்கி உத்தியோகத்தர் ஆகியோருக்கும் மணமக்கள்தேவை. விண்ணப்பம் ரூபா 50/-. சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [20248]

## மாணவர் அகராதி

ஆங்கிலம் படிக்கிறீர்களா? உங்களுக்கு கிடைக்கக் கூடிய மிகச் சிறந்த ஆங்கில, தமிழ் அகராதி 'வரதர் மாணவர் அகராதி' ரூபா 95/- எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம், [சி-1699]

## பொது அறிவு நூல்

கிராம சேவை அலுவலர் — ஆரம்பப் பள்ளி ஆசிரியர் தெரிவுப் பரீட்சைகள் - 1992 ஆகியவற்றுக்கு உகந்த பயனுள்ள நூல் — தொகுப்பாசிரியர்: த. ந. பஞ்சாட்சரம். விலை ரூபா 60/-. சகல முன்னணிப் புத்தகசாலைகளிலும் கிடைக்கப்பெறும். [சி/1690]

## சிறுகதை எழுத

'சிறுகதை எழுத விரும்புவோருக்கு எனது பட்டறிவுக் குறிப்புகள்' வரதர் எழுதியது ரூபா 18/- எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன் துறைச்சாலை, யாழ்ப்பாணம். [சி-1698]

## O/L கணிதம்

மாணவர்கள் தாமாகவே கற்றலை மேற்கொள்ளச் சிறந்த கணித நூல்கள் ஆசிரியர் சச்சிதானந்தனின் உதவி நூல் வரிசைகளாகும். மடக்கைகள், விருத்திகள், புள்ளிவிவரவியல், திரிகோண கணிதம் ஒவ்வொன்றும் ரூ 20/-. பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா மற்றும் புத்தகசாலைகளில். [5066]

## உண்ணாவிரதம்

தீவுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து அரியாலை கிழக்கு நாவலடியில் தங்கி உள்ள மக்களினால் அன்னை பூபதி தினத்தை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது. [இ-143]

---

*"Practice Makes one Perfect"*

**O/L - 1992 பரீட்சைக்கான**

கணிதம், விஞ்ஞானம், தமிழ்,
சமூகக்கல்வி, ஆங்கிலம்
ஆகிய பாடங்களுக்கான

**பயிற்சிப் பரீட்சைகள்**

ஆரம்பம்: 09-04-1992

- ★ Bond Institutes — யாழ்ப்பாணம்
- ★ Express Institute — இருபாலை
- ★ Pearl Institute — நீர்வேலி
- ★ Kugan Institute — ஆவரங்கால்
- ★ Satha Pens — வடமராட்சி
- ★ Brilliant — தென்மராட்சி
- ★ Vinyls — சுன்னாகம்
- ★ Vinayahar — ஆனைக்கோட்டை
- ★ Bitsmans — மானிப்பாய்
- ★ Paarathy — சித்தன்கேணி
- ★ National Academy — பண்டத்தரிப்பு

மேலதிக விவரங்களுக்கு;
EXAMINATION UNIT,
**BOND INSTITUTES**
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[4583]

---

COMMERCIAL BANK

வளமான சேமிப்பிற்கு வடக்கில் ஓர் புதிய பாதை
**உங்கள் வங்கி வழங்கும்**

வர்த்தக வங்கி சேமிப்புச் சான்றிதழ்
COMBANK SAVINGS CERTIFICATE

வர்த்தக வங்கி சேமிப்புச் சான்றிதழ் உறுதிசெய்வது:-

- ★ வைப்பிலிடும்போதே வளமான வட்டி
- ★ கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள்
- ★ வட்டி மீதான பிடிப்புவரி விலக்கு (No Withholding Tax)
- ★ முத்திரைத் தீர்வு விலக்கு (No Stamp Duty)
- ★ கடன் பெற இலகுவான பிணை உறுதி
- ★ நியமிக்கும் மறு உரித்தாளருக்கு பணம்

மக்கள் சேவையில்
முதன்மையான உங்கள் வங்கி
வெகு விரைவில் வழங்கும்

# புத்தாண்டுப் பரிசுத்திட்டம்

நாடு பூராவும் உள்ள எமது கிளைகளில் ரூ. 500/-, ரூ. 1,000/-, ரூ. 5,000/-, ரூ. 10,000/- ஆகிய பெறுமதிகளில் 6, 12, 24 மாத காலங்களில் முதிர்வடையும் சான்றிதழ்களைப் பெறலாம்.

சான்றிதழுக்கான அட்டவணை:

| நீங்கள் கொடுப்பது | | | நீங்கள் பெறுவது |
|---|---|---|---|
| 6 மாதங்கள் | 12 மாதங்கள் | 24 மாதங்கள் | முதிர்ச்சியின் போது |
| 14.5% இல் | 15.5% இல் | 16.5% இல் | |
| ரூ. 465/- | 433/- | 375/- | ரூ. 500/- |
| ரூ. 932/- | 866/- | 750/- | ரூ. 1000/- |
| ரூ. 4662/- | 4330/- | 3760/- | ரூ. 5000/- |
| ரூ. 9325/- | 8659/- | 7519/- | ரூ. 10000/- |

★ எம்மை நாடுங்கள் ★ சேமியுங்கள்
★ வளருங்கள்

**வர்த்தக வங்கி**
474, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**உங்கள் வெற்றி எங்கள் பலம்**

தலைமையலுவலகம்: "கமர்ஷியல் இல்லம்",
21, பிறிஸ்டல் வீதி, கொழும்பு - 1.

எமது ஏனைய கிளைகள்:

வெளிநாட்டுக் கிளை (கொழும்பு), நகரக்கிளை (கோட்டை), புறக்கோட்டை, கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை நாரஹேன்பிட்டி, பொரளை, நுகேகொடை, மகரகம, கட்டுநாயக்கா (F. T. Z), நீர்கொழும்பு, வென்னப்புவ, கண்டி, மாத்தளை, [illegible] குருநாகல், ஹிங்குராக்கொடை, ஹிக்கடுவ, காலி, மாத்தறை.

[சி-1743]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பிரிவில்

# இரு மாதங்களில் 1627 பேர் நாய்களினால் கடியுண்டனர்

## இதுவரை 10 பேர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம் — கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதாரப் பிரிவில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த இரு மாவட்டங்களிலும் கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் மொத்தம் 1627 பேர் நாய்களினால் கடியுண்டனர் என்றும் இதில் விசர் நாய்க் கடியினால் பாதிக்கப்பட்டவர்கள் 264 பேர் என்றும் யாழ். கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பகுதிப் பதிவேடு மூலம் தெரிய வருகிறது.

யாழ்ப்பாண வைத்தியசாலைப் பதிவேட்டின்படி கடந்த ஜனவரி மாதம் 249 பேர் நாய்களினால் கடியுண்டு சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் 22 பேர் விசர் நாய்க் கடிக்கு உள்ளானோர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

பெப்ரவரி மாதம் இத்தொகை மேலும் அதிகரித்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலைப் பதிவேட்டின்படி பெப்ரவரி மாதம் 255 பேர் நாய்களினால் கடியுண்டனர். இவர்களில் 55 பேர் விசர் நாய்க்கடிக்கு உள்ளானார்கள்.

இம்மாதம் (மார்ச்) 27 ஆம் திகதி வரை யாழ். போதனா வைத்தியசாலையில் 312 பேர் நாய்க்கடிக்கு சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் 60 பேர் விசர் நாய்க்கடிக்கு உள்ளானார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். கிளிநொச்சி மாவட்டம் அடங்கிய பிராந்திய சுகாதாரப் பிரிவில் இந்த ஆண்டு இதுவரை 10 பேர் விசர் நாய்க்கடியினால் மரணமாகியுள்ளனர் என்று வட பிராந்திய தொற்று நோயியலாளரும் பதில் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருமான டாக்டர் க. த. சிவபாதம் தெரிவித்தார்.

கடந்த வருடம் முழுவதும் 15 பேர் மட்டுமே விசர் நாய்க் கடியால் மரணமானார்கள் என்றும் அவர் கூறினார்.

[இ-3 15]

## வடமராட்சிப் பகுதியில் அன்னை பூபதி நினைவு தினம்

வடமராட்சி, மார்ச் 29

தியாக தீபம் அன்னை பூபதியின் நான்காவது ஆண்டு நினைவு தினம் வடமராட்சிப் பகுதி எங்கும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தொண்டமனாறு, நெல்லியடி, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில், வீதிகள் தோறும் அலங்கரிக்கப்பட்டு அன்னையின் திருவுருவப் படங்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ளன.

மேலும் அலுவலகங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வர்த்தக நிலையங்கள், விடுதலைப் புலிகளின் முகாம்கள், செயலகங்கள், பாசறைகள், காவல் துறைப் பணிமனைகள் போன்ற இடங்களிலும் அன்னை பூபதியின் படங்கள் வைத்து பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பகுதியில் அன்னையின் நினைவாக உண்ணாவிரதமும், கருத்தரங்கும் பரவலாக பல இடங்களில் இடம்பெற்று வருகின்றன.

வடமராட்சிப் பகுதிக் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக கலை, பண்பாட்டுக் கழகத்தினர் கலந்துரையாடல் கூட்டங்களையும் ஏற்பாடு செய்துள்ளனர். [த-165]

## நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 29

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் சைதடிப் பிரதேச மட்டத்தில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு வைபவம் நாளை திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தில் இடம்பெறும். [த-5]

★ ★ ★

யாழ். மாவட்ட சாரணர் சங்கம், காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கம் ஆகியவற்றின் குருளைச் சாரணர், சாரணர், திரிசாரணர், சாரண ஆசிரியர்கள், குருளைச் சாரண ஆசிரியர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள் ஆகியோர்களுக்கான விசேட கூட்டம் நாளை திங்கள் பிற்பகல் 3-30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

மானிப்பாய் கலையரசு கலைக்கழக நாடகப் பயிற்சிக் கல்லூரியினர் ஏற்பாடு செய்துள்ள கலையரசு சொர்ணலிங்கம் பிறந்த நாள் நினைவு தினக் கொண்டாட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் கல்லூரியில் நடைபெறும்.

கழகத்தின் தலைவி ஆசிரியை செல்வி எஸ். விமலா தலைமையில் விழா நடைபெறும். பலர் அஞ்சலி உரை ஆற்றுவார்.

## முஸ்லிம் விவசாயிகள் கொலை

நிந்தவூர் அல்லி முல்லையில் இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு முஸ்லிம் விவசாயிகள் கொல்லப்பட்டனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [த]


யாழ். நூல் தந்த அடிகளார்

சுவாமி விபுலானந்தர்

நூற்றாண்டு வெளியீடு,

அழகிய ஸ்ரிக்கர்,



'மில்க்வைற் நீல சோப்'

மேலுறைகளில் பத்து அனுப்பி ஒரு ஸ்ரிக்கர் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

[சி-1738]



## சதுரங்கம் (CHESS)

சதுரங்கப் போட்டிகளில் பங்குபற்றுவோருக்கும், சதுரங்கம் விளையாடப் பழக விரும்புவோருக்கும், பயிற்சி கொடுக்கப்படும் ஒரு வகுப்பில் ஆறு பேர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர். மேலதிக விவரங்களுக்கு 03-04-1992 வெள்ளி வரை கீழ்க் குறிப்பிட்ட நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

காலை 9 — 11 வரை
மாலை 3 — 5 வரை

— வை. கணேசலிங்கம்.

161, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
[வண்ணை ஆங்கில வைத்தியசாலைக்கு முன்பாக]

[4586]



## A/L PHYSICS

திரு. விமல்ராஜ் B. Eng.

(1983 ஆம் ஆண்டு வரை குடாநாட்டின் முன்னணி ஆசிரியர், வெளிநாடு சென்று உயர்கல்வி கற்ற பின் மீண்டுள்ளார்.)

சனி — ஞாயிறு

12-00 — PAPER CLASS
1-00 — LIGHT
2-00 — ELECTRICITY
3-00 — PROPERTIES OF MATTER

ஆரம்பம்: 05 - 04 - 1992

**BOND Institutes**

58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[4581]



## இசை நிகழ்ச்சி பின்போடப்பட்டது

சென்றலைட் விளையாட்டுக் கழகம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடத்த இருந்த

"ராஜன்ஸ் இசைக் குழுவினரின்"

"இன்னிசை மழை"

நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் பின்போடப்படுகின்றது என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

நிகழ்ச்சி நடைபெறும் மறு திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

— சென்றலைட் விளையாட்டுக் கழகம்.

[சி-1748]



## TOEFL / ESOL

★ TOEFL - புதிய வகுப்பு

செவ்வாய் / வியாழன் 6-00 a.m. — 7-30 a.m.

ஆரம்பம்: 31 - 03 - 1992

★ ESOL - (English for Speakers of Other Languages)

திங்கள் / வெள்ளி 4-30 p.m. — 6-00 p.m.

அண்மையில் தொடங்கப்பட்டது.

விரிவுரையாளர்: சுந்தையா நவரோந்திரன்


Jaffna English Academy,

9, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[சி-1750]



## ஓராண்டு நினைவஞ்சலியும் ஆண்டு திவச அழைப்பும்



அமரர்

பொன்னையா சுந்தரம்

தோற்றம்: 01 — 09 — 1934

மறைவு: 10 04 — 1991

திதி: 29 — 03 — 1992

அன்பின் சிகரமே! அருமை அப்பா! அன்பாலும், பண்பாலும் அரவணைத்து வளர்த்தீரே! ஆண்டொன்று சென்றாலும் ஆறாது எமது துயர். நீண்ட வழி நீர் சென்று இறைவனடி சேர்ந்தாலும், தூண்டில் புழுவாய் துடிக்கின்றோம். உம்மை நினைத்து எம்மைப் பிரிந்த ஓராண்டென்ன, ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் உருவம் எம்மனதில் நீங்காமல் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இதயம் நெகிழ்ந்த இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பூர்வபக்க ஏகாதசி திதி இன்று [29-3-1992] ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்;
அன்பு மனைவி, மக்கள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

கோகுலம் வீதி,
கோண்டாவில் வடக்கு.

[20210]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 29ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் தோமா டானியல்

B.A. Dip. - in - Edu., M.A.

(கொத்தணி அதிபர், ஏழாலை)

மண்ணில்: **12 — 03 — 1934**

விண்ணில்: **01 — 03 — 1992**

'' என் சாவோ உன் வருகை நாளோ ஐயா
எது முந்தும் எனவொன்றும் அறியேனையா
எது வந்தும் எனக்கென்ன பயம் தானையா
கதி தந்த உமக்குள்ளே ஜெயம் ஜேசையா ''

''கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் ''
பிலி 1 : 21

இவரின் வாழ்க்கைக்காக நன்றி செலுத்தும் ஸ்தோத்திர ஆராதனை இன்று (29 - 3 - 1992) ஞாயிற்றுக்கிழமை 11-30 மணிக்கு மாகியப்பிட்டி -[சண்டிலிப்பாயில் நடைபெறும்.

— தோமா குடும்பத்தினர்.

(20268)

# 6 ஆம் மாத நினைவஞ்சலி



மலர்வு: 5 — 9 — 1981

உதிர்வு: 2 — 11 — 1991

## மகேஸ்வரநாதன் கஜேந்திரன்

(கஜா)

[வேலணை சைவப் பிரகாச வித்தியாலய மாணவன்]

எம் அன்புச் செல்வமே!

பால்மணம் மாறாத பாலகனே!
இராணுவத்தின் கொடூரத்தால்
காலன் உன்னை வென்றுவிட்டான்
அல்லல்படும் நேரத்திலே - உன்
அருகில்லாப் பெற்றோர் நாம்
அம்மாவென அழைத்தாயோ
அத்தைதான் அருகில் நின்றாள்
காலமெல்லாம் உன் நினைவால்
கலங்கி நிற்க வைத்திட்டாயே!
ஆண்டவனின் சன்னிதியில் உன்
ஆவி பிரிந்ததுவே!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்;

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
அம்மம்மா, அப்பம்மா, அப்பப்பாமார்,
தாத்தாமார், பெரியப்பா, பெரியம்மா,
மாமாமார், அத்தைமார், மைத்துனர்மார்.

211, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

செ. மகேஸ்வரநாதன்.

[20275]

# லில்லியில் இலவச பாட புத்தகங்கள்

யாழ்ப்பாணத்துக்கான உணவுப் பொருள்கள், கல்வித் திணைக்களத்துக்கான இலவச பாடப் புத்தகங்கள், தபால்கள், மக்கள் வங்கிக்கான பணம் ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு ''லில்லி'' கப்பல் இன்று கொழும்பில் இருந்து புறப்படுகின்றது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை—

கடந்த செவ்வாய்க்கிழமை அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு 26 லொறிகள் கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்டன என்றும்—

முல்லைத்தீவுக்கு 22 லொறிகளில் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பப்பட்டன என்றும்— தெரிவிக்கப்பட்டது. [இ-த]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

இராமநாதன் நுண்கலைக்கழகம்

## இசைக்கலைமணி/ நாட்டியக்கலைமணி டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பயிலுவதற்கான அனுமதி - 1991/92

மேற்குறித்த பயிற்சி நெறியினை பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படவுள்ளன.

**தகைமைகள்:**

(1) பரீட்சார்த்திகள் க. பொ.த. [உயர்தரம்] பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தது மூன்று பாடங்களில் கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியம் ஒரு பாடமாகச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியத்தில் சித்தி பெறாதவர்கள் வடஇலங்கைச் சங்கீத சபையினரால் நடத்தப்படும் தரம் 4 இல் சித்தி பெற்றிருப்பதுடன் க. பொ. த. [உயர்தரம்] பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(2) பரீட்சார்த்தி 31-1-92 அன்று 15 வயதிற்கு உட்பட்டவராகவும், 25 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

அனுமதி பற்றிய விவரங்களும், விண்ணப்பப் பத்திரமும், சிரேஷ்ட உதவிப் பதிவாளர் [தேர்வுகள்] தேர்வுக் கிளை, அவர்களிடமிருந்து நேரில் ரூபா 15க்கான பற்றுச்சீட்டு (பல்கலைக்கழக) செலுத்தியோ, தபால் மூலம் எனின் 23x10 செ. மீ. அளவுள்ள தபால் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு, விலாசமிட்டு ரூபா 15க்கான காசுக்கட்டளையை நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என பெற்று அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:
30.04.1992

[சி/1747]

# அடையாள உண்ணாவிரதம்

அன்னை பூபதி நினைவாக யாழ். மாவட்ட ப.நோ.கூ. சங்கங்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் 10 இடங்களில் உண்ணா விரதம் அனுஷ்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட 10 இடங்களிலும் அந்த இடத்தை அண்மித்த பகுதிச் சங்கப் பிரதிநிதிகள் இந்த உண்ணா விரதத்தில் கலந்து கொள்வார்கள். [இ-3]

# பதவி வெற்றிடங்கள்

கூ. ஊ. தொழிற்சங்கத்தில் காலியாகவுள்ள கீழ் காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. நிர்வாகச் செயலாளர்

**தகைமைகள்:**

க. பொ. த. [சா/த] ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி தமிழ், ஆங்கிலம், வர்த்தகம் ஆகியவற்றில் திறமைச் சித்தி. க. பொ. த. (உ/த)குறைந்தது 3 பாடங்களில் சித்தி. கூட்டுறவுத்துறையில் அனுபவம், நிர்வாகத்திறமை, தொழிற்சங்க அனுபவம் இருத்தல் வேண்டும்.

தமிழ், ஆங்கில தட்டெழுத்தில் போதிய அனுபவம் விரும்பத்தக்கது.

**வயது:** 35 — 50

**சம்பள விவரம்:** ரூபா 805 உம் இதரபடிகளும்.

## 2. எழுதுவினைஞர்

**தகைமைகள்:**

க. பொ. த. (சா/த) 6 பாடங்கள் சித்தி. தமிழ், ஆங்கிலம் கணிதம்/வர்த்தகம் ஆகியவற்றில் திறமைச் சித்தி.

தமிழ், ஆங்கிலம் தட்டெழுத்தில் போதிய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது:** 20 — 35

**சம்பள விவரம்;** ரூபா 730 உம் இதரபடிகளும்

சகல விவரங்களையும் உள்ளடக்கிய விண்ணப்பங்கள் 12-04-92க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 615/(46/2), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

- கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்

615, [46/2], ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[20274]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 12 — 1932

மறைவு: 29 — 02 — 1992

## அமரர் சுந்தரம் சிவராஜா

திதி- மாசி மாத அபரபக்க துவாதசி

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்
உயர் அன்பின் உறவுகள் பூண்டவராய்
தாயினும் ஓர்மை மிகுந்தவராய்
உறவுகளை உயிரென்று உள்ளத்தில் சுமந்தீரே!
வேதனைகள் வரினும் சற்றே சலித்திருப்பீரா?
அதிவிரைவில் திரும்புவேன் என்றுரைத்து
நீண்டு வளர்ந்த எம் ஆசைகளை நினைவினிற்-
கொள்ளாது
காலத்தை வென்று காலனோடு
எங்களை காக்க வைத்து சென்றீரோ!
ஓம் சாந்தி!

இன்று (29-3-92) ஞாயிறு காலை 9-00 மணிக்கு காக்கைதீவு கரையான்பிட்டி மடத்தில் நடைபெறும் எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி வைபவத்திலும், நாளை (30-3-92) திங்கள் அன்னாரின் வீட்டில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தவர்கள்.

26, நாவலடி லேன்,
வண். மேற்கு,
யாழ்ப்பாணம்.

(4575)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இனங்காணப்பட்ட அடித்தளம்

அண்மைக் காலமாக தென்னிலங்கையில் இருந்து நல்லெண்ணத் தூதுக் குழுக்கள் யாழ்ப்பாணம் வந்து செல்கின்றன. தமிழ்ப் பகுதிகளைப் பற்றித் தாம் அங்கு கேள்விப்பட்டவற்றுக்கும் அல்லது பத்திரிகைகள் வானொலிகள் மூலம் அறிந்தவற்றுக்கும் இங்குள்ள நிலைமைகளுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளதாக அவர்கள் திகைத்துப் போகிறார்கள்.

தங்களைப் போலவே, தென்னிலங்கை மக்கள் எல்லோரும், அரசாங்கத்தினதும் அங்குள்ள பத்திரிகைகளினதும் பொய்ப்பிரசாரத்தை நம்பி வட பகுதியின் உண்மை நிலை தெரியாமல் இருட்டில் உள்ளதாகக் கூறிக் கவலைப்படுகிறார்கள்.

ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்து சென்ற நல்லெண்ணத் தூதுக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் இங்குள்ள உண்மை நிலையை, மக்களுக்கு உள்ள கஷ்டங்களை, துன்பங்களை, துயரங்களை ஓரளவுக்கு — தம்மால் இயன்ற அளவில்— தெற்கில் பிரசித்தப்படுத்தி உள்ளார்கள் என்பது உண்மை.

ஆயினும் அவர்கள் இங்கு கண்டு கேட்டுச் சென்று சொன்ன செய்தி மிகமிகக் குறைந்த எண்ணிக்கையான தென்னிலங்கையருக்கே எட்டியிருக்கும்.

கடந்த மூன்று நாட்களாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த கத்தோலிக்க உயர்மட்டக் குழுவினர் தமது விஜயத்தின் போது முக்கியமான ஓர் அடித்தளத்தை இனங் கண்டிருக்கிறார்கள்.

போரின் கொடுமைகளின் மத்தியிலும், அதனால் உண்டான துன்ப துயரங்களின் மத்தியிலும் நம்பிக்கையான சமிக்ஞைகளைக் கண்டோம். கஷ்டங்களையும், துயரங்களையும் எதிர்கொண்டு தொடர்ந்தும் வாழ வேண்டும் என்பதிலும் மீட்சி அடைய வேண்டும் என்பதிலும் (தமிழ்) மக்கள் மன உறுதியுடன் இருப்பதை உணர முடிந்தது — என்று தூதுக்குழுவினர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்கள் போரைக் கண்டு அஞ்சவில்லை. துன்பங்களைக் கண்டு துவளவில்லை. வாழ்க்கை வேண்டாம் என்று சலிப்புறவில்லை— விரக்தியடையவில்லை. இவற்றின் மத்தியிலும் வாழ்வோம். இலட்சியத்தை அடைந்து மீட்சி பெறுவோம் என்ற மனத் துணிவுடன் உள்ளார்கள்.

இராணுவ நடவடிக்கைகள் மூலம், பொருளாதாரத் தடைகள் மூலம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை உருக்குலைக்க முடியாது. அவர்கள் தங்கள் முடிவில் உறுதியாக நிற்கிறார்கள். எந்தக் கஷ்டத்தைக் கொடுத்தும் அவர்களின் மன உறுதியைத் தளம்பச் செய்ய இயலாது — என்ற அடித்தளத்தை சரியாக இனங் கண்டிருக்கிறார்கள்.

அவர்கள் மட்டும் இனங் கண்டதால் பயனில்லை. தமிழர்களின் மன உறுதியை தெற்கிலுள்ள அரசியல் தலைமைக்கும் இராணுவத் தலைமைக்கும், நேரில் எடுத்துச் சொல்ல வேண்டும். போரை நிறுத்துங்கள். உங்கள் இராணுவப் போரினால் தமிழர் மனங்களில் உருக்காக உறைந்து விட்ட உரிமை உணர்வை, அதன் பாற்பட்ட உறுதியை கலைக்க முடியாது. சமாதானப் பேச்சுகளைத் தொடங்குங்கள், — என்று அவர்களுக்கு இடித்துரைக்க வேண்டும்.

ஆயர்கள் சபை ஜனாதிபதியைச் சந்திக்கும் போது போர் நிறுத்தத்தை மட்டும் வெறுமனமே வலியுறுத்தக் கூடாது. தாம் இனங்கண்ட அடித்தளத்தையும் அவருக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

# காஷ்மீர் தீவிரவாதிகள் மீண்டும் இந்தியாவுக்குள் ஊடுருவ கங்கணம்

புதுடில்லி, மார்ச். 29

காஷ்மீர் விடுதலை முன்னணித் தீவிரவாதிகள் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள ஆஸாத் காஷ்மீரிலிருந்து இந்தியாவின் ஜம்மு காஷ்மீருக்குள் மீண்டும் நாளை திங்கட்கிழமை பேரணியாக ஊடுருவிப் பிரவேசிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

இந்தப்பேரணியைத் தடுக்க இந்திய, பாகிஸ்தான் அரசுகள் எல்லைப் பகுதியில் பாதுகாப்பை வலுப்படுத்தியுள்ளன.

ஆஸாத் காஷ்மீரின் பிரதமர் சர்தார் அப்துல் கையூம், ஊர்வலம் மாகாணத் தலைநகர் முஸாபரபாத்துக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது எனக் கூறினார். சகல பாதைகளிலும் பாகிஸ்தான் இராணுவத்தால் தடைகள் போடப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் பகுதியிலிருந்து யாரும் எல்லையைக் கடந்து ஜம்மு காஷ்மீருக்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டாது என புதுடில்லியில் அதிகாரிகள் கூறினர்.

கடந்த மாதமும் காஷ்மீர் தீவிரவாதிகள் இவ்வாறு இந்தியக் காஷ்மீருக்குள் நுழைய பேரணி வகுத்தனர் என்பதும்—

அதனைத் தடுத்து நிறுத்த பாகிஸ்தான் இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஏழு பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-10]

## அமெரிக்காவில் வேகமாக எய்ட்ஸ் நோய் பரவுகிறது

வாஷிங்டன், மார்ச் 29

அமெரிக்காவில் எய்ட்ஸ் நோய் எதிர்பார்த்ததிலும் பார்க்க வேகமாகப் பரவி வருவதாக மனித வளங்கள் திணைக்களம் எச்சரித்துள்ளது.

எய்ட்ஸ் வைரஸ் காவிகளாக 10 லட்சத்துக்கு அதிகமானோர் அமெரிக்காவில் தற்போது இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித வளங்கள் திணைக்களத்தின் புள்ளி விவரப்படி நூறு ஆண்களில் ஒருவர் எய்ட்ஸ் வைரஸ் காவியாக இருக்கிறாராம்.

பெண்களைப் பொறுத்தவரையில் 800 பேருக்கு ஒருவர் எய்ட்ஸ் காவி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து எய்ட்ஸ் தடுப்புப் பிரசாரத்தை அமெரிக்க அரசாங்கம் தீவிரப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## பாதயாத்திரையை குழப்ப முயற்சி எடுக்கப்பட்டதாம்

கொழும்பு, மார்ச் 29

எதிர்க்கட்சியினர் நடத்திவரும் பாதயாத்திரையைக் குழப்ப எடுக்கப்பட்ட சதி முயற்சி ஒன்று முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

பாதயாத்திரை அமைப்பாளர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தா ராஜபக்ஷ இத்தகவலை வெளியிட்டார்.

மதுபோதையுடன் சிலர் பாதயாத்திரையில் கலந்து கொண்டனர் என்றும் அவர்களை விசாரித்தபோது அக்கறையுள்ள சில சக்திகள் பாதயாத்திரையைக் குழப்ப, பாதயாத்திரையில் கலந்து கொள்ள அவர்களை அனுப்பிய விஷயம் தெரிய வந்ததாகவும் திரு. ராஜபக்ஷ சொன்னார்.

உடனே அந்த நபர்கள் பாதயாத்திரையில் கலந்து கொள்ளாமல் தடுக்கப்பட்டனர் என்றும் அவர் மேலும் சொன்னார்.

எக்கட்டத்திலும் மது பாவிக்கக்கூடாது என்று பாதயாத்திரைத் தொண்டர்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டிருந்ததாகவும் கூறிய திரு. ராஜபக்ஷ, சதிச் செயல் குறித்து பொலீஸாருக்கு முறையிடப்பட்டதாகவும் சொன்னார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட, 8 அரசியல் கட்சிகளினால் அரசுக்கு எதிராக இந்த பாதயாத்திரை நடத்தப்பட்டது தெரிந்ததே. [த-எ]

## தென்னிலங்கையிலிருந்து சர்வமதத் தலைவர்கள் குழு

யாழ்ப்பாணம், மார்ச் 29

'தென் இலங்கையில் இருந்து சர்வமதத் தலைவர்கள் அடங்கிய தூதுக்குழு ஒன்றை விரைவில் யாழ்ப்பாணம் அழைத்து வருவேன்'.

இப்படிக் கூறினார் துறவிகள் சபையின் தலைவர் வண. பிதா அல்பிரட் அலெக்ஸ்சாண்டர்.

கத்தோலிக்க திருச்சபை தூதுக் குழுவுடன் இங்கு வருகை தந்த சமயம் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

மீண்டும் யாழ்ப்பாணம் வரும்போது புத்தபிக்கு, கத்தோலிக்க குரு, இந்துமதக் குரு, முஸ்லிம்மதக் குரு ஆகியோர் அடங்கிய குழுவை அழைத்து வரவிருக்கிறேன். அவர்களுடன் சிங்கள கல்விமான்களையும் அழைத்து வருவேன் என்றும் அவர் கூறினார். [இ-3]

## ஜே.வி.பி. பிரமுகர்கள் மூவர் எம்பிலிப்பிட்டியாவில் கைது

கொழும்பு, மார்ச் 29

ஜே. வி. பி. இயக்கத்தின் முக்கிய பிரமுகர் ஒருவரையும் அவரது இரண்டு உதவியாளர்களையும் எம்பிலிப்பிட்டிய பொலீஸார் அண்மையில் கைது செய்தனர்.

மினுவாங்கொடையில் உள்ள மறைவிடம் ஒன்றில் அவர்கள் தலைமறைவாக இருந்தபோது கைது செய்யப்பட்டனர்.

பல கொலைகள் மற்றும் வன்செயல்களில் தாம் ஈடுபட்டிருந்ததை அந்த பிரமுகர் ஒப்புக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. அவரது தலைமையிலான குழுவினால் கொலை செய்யப்பட்டவர்களில் பாடசாலை அதிபரும் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டது. [த-எ]

# வடக்கு, கிழக்கிற்கு பத்து அம்புலன்ஸ்கள்

### சுவிடிஷ் அமைப்பு வழங்கியது

வடக்கு — கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றும் சுகாதார சேவை நிறுவனங்களுக்கு 10 அம்புலன்ஸ் வண்டிகளை சுவிடிஷ் சர்வதேச அபிவிருத்தி அதிகார சபை வழங்கியிருக்கிறது. பத்து அம்புலன்ஸ்களையும் சபை சுகாதார அமைச்சிடம் கையளித்திருக்கிறது.

யுனிசெப் நிறுவனத்தின் ஊடாக இந்த உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

வடக்கு — கிழக்கு பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரண உதவிகளை மேற்கொள்ள 21 லட்சம் ரூபாவையும் சுவிடிஷ் அமைப்பு வழங்கியிருக்கிறது. [உ-3]

## கட்டைக்காட்டில் மிதிவெடியில் சிக்கி கால் இழந்தார்

யாழ்ப்பாணம், மார்ச். 29

வீடுபார்க்கச் சென்றவர் வழியில் இருந்த மிதிவெடியில் சிக்கி வலது காலை இழந்தார்.

கட்டைக்காடு தொடுவாய்ப் பகுதியில் வெள்ளி காலை 7 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

அப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து செம்பியன்பற்றில் வசித்துவரும் யாக்கோப்பு வின்சன் பெனடிக்ற் (வயது 27) என்பவரே காலை இழந்தவராவார். இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-15)

### ஜெயலலிதா கொலை முயற்சி:

## தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீது விரைவில் வழக்குத் தொடரப்படலாம்

சென்னை, மார்ச் 29

சட்டசபைக்குள் நடந்த ரகளையின் போது செல்வி ஜெயலலிதாவைக் கொலை செய்ய முயன்றதாக முன்னாள் தி.மு.க. அமைச்சர்கள் சிலர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படலாம்.

தமிழ்நாடு சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா இவ்வாறு தெரிவித்தார்.

1989 மார்ச் 25 ஆம் திகதி தமிழ்நாடு சட்டசபையில் நடந்த ரகளையின் போது அப்போது எதிர்க் கட்சித் தலைவியாக இருந்த செல்வி ஜெயலலிதா சபைக்குள் வைத்துத் தாக்கப்பட்டார் என்பது தெரிந்ததே. அவரது துகிலை உரிய சில எம். எல். ஏக்கள் முயன்றனர் என்று கூட தமிழகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்ததும் தெரிந்ததே.

இந்தச் சம்பவம் தொடர்பாகவே தி. மு. கவின் முன்னாள் அமைச்சர்கள் சிலர் மீது வழக்குத் தொடரப் படலாம் என்று தற்போதைய சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா தெரிவித்திருக்கிறார். [உ-த]

## சிசு மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்ட 24 நாள் வயதுடைய ஆண் சிசு ஒன்று நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானது.

மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த சிவம் சுதர்சன் என்ற சிசுவே மரணமானதாகும். [உ-15]

## இன்று

யாழ்ப்பாணம், மார்ச். 29

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று ஏழாலை மயிலங்காடு ஞானகலா அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தா அணி மோதும்.

இந்த ஆட்டம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

வலைப்பந்தாட்டப் போட்டியில் நவாலி முரசொலி அணியை எதிர்த்து உடுவில் ஓல்ட் புளூஸ் அணி மோதும். இந்த ஆட்டம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

## கலைநிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 29

விடுதலைப் புலிகள் கலை, பண்பாண்டுக் கழகத்தின் வலிகாமம் பிரிவினர் நாளை மாலை 7 மணிக்கு மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் மாபெரும் கலைநிகழ்ச்சிகளை நடத்தவுள்ளனர். இதில் விடுதலைப் புலிகளின் பல உறுப்பினர்கள் உரையாற்றவுள்ளதோடு, பட்டிமன்றம், நாட்டிய நாடகம், நாடகங்கள் ஆகிய பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

[உ]

## ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

இணுவில் அருள்மிகு பரராசப் பிள்ளையார் மணவாளக் கோலப் பூர்த்தி விழா இன்று சங்காபிசேகத்துடன் முடிவடைகிறது.

★ ★ ★

மல்லாகம் அருள்மிகு வீரபத்திரர் ஆலய அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. பத்து நாள் திருவிழாக்களைத் தொடர்ந்து எதிர்வரும் ஏப்ரல் எட்டாம் திகதி சங்காபிஷேகம் இடம்பெறும்.

★ ★ ★

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா எதிர்வரும் ஏப்ரல் பதினாறாம் திகதி நடைபெறும். [அ-68-89]

## தந்தை செல்வா நினைவு வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் நினைவு தொடர்பான நன்றி செலுத்தும் திருவிருந்து வழிபாடு எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணிக்கு சுண்டிக்குளி பரியோவான் ஆலயத்தில் நடைபெறும். (த)

## தமிழரும் நியமனம்

கொழும்பு, மார்ச் 29

தேசிய சுகாதாரக் கொள்கையை வகுப்பதற்காக ஜனாதிபதி பிரேமதாஸா அமைத்துள்ள விசேட செயலணிக் குழுவிற்கு மேலும் ஆறு பிரமுகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத் தலைவர் டாக்டர் எஸ். பவானி என்று அறிவிக்கப்பட்டது. [உ-எ]

## நடன அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

செல்வி பாலினி பாலசிங்கத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

கௌரவ விருந்தினர்களாக பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி, விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத் தலைவர் திரு. புதுவை இரத்தினதுரை ஆகியோர் கலந்து கொள்வர். [த]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# A/L PHYSICS

**திரு. சுந்தரலிங்கம்** B.Sc.

செவ்வாய் — வியாழன்
★ 3-00 — SOUND
★ 4-00 — HEAT

சனி — ஞாயிறு
★ 6-30 — LIGHT
★ 8-00 — MECHANICS
★ 9-00 — புலங்கள்

**ஆரம்பம்: 02 - 04 - 1992**

**BOND INSTITUTES**
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[4582]


## கண்ணீர் அஞ்சலி

### திரு. கு. சச்சிதானந்தா

எமது ஸ்தாபனத்தின் ஸ்தாபகர் திரு. கு. சச்சிதானந்தா அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Coopers & Lybrand, Satchithananda Pasupati & Co
Chartered Accountants
Jaffna Branch

[சி/1751]

## 31 ஆம் நாள் நீங்கா நினைவுகள்

### திருமதி நாகரத்தினம் தம்பிஐயா

எமது கழக வளர்ச்சிக்கு முன்னின்றுழைத்து சிட்னி [அவுஸ்ரேலியா] யில் காலமான திருமதி நாகரத்தினம் தம்பிஐயா அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

சம்பியன் வீதி, கொக்குவில்.
வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. கார்த்திகேசு சுப்பையா

தோற்றம்: **05—03—1913**
மறைவு: **01—03—1992**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எங்கள் அன்புத் தந்தையே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

எங்கள் தந்தையாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட, கொள்ளாத உறவினர்கள் யாவரும் எமது இல்லத்தில் இன்று (29-03-92) நடைபெறும் சபிண்டீகரணத்திலும் நாளை மறுதினம் [31-03-92] நடைபெறும் வீட்டுக்கிருத்திய மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அழைக்கிறோம்.

116/6A முருகமூர்த்தி வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்
கா. கனகலிங்கம்
(மருமகன்) குடும்பத்தினர்
[20278]

## மகாபொல உதவி நிதி அதிகரிப்பு

மகாபொல உதவித் திட்டத்தின் கீழ் உதவிபெறும் மாணவர்களுக்கான மாதாந்த உதவித் தொகை ஏப்ரல் மாதம் முதல் 650 ரூபாவிலிருந்து 950 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

இதற்கான உத்தரவு ஜனாதிபதி பிரேமதாஸாவினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

[உ-10]

## பொன்னாலையில் வீடுகள் சேதம்

பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் பொன்னாலை சாந்தி குடியேற்றப் பகுதியில் விழுந்து வெடித்ததால் சில வீடுகள் சேதமடைந்தன.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

குடியேற்றப் பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்துவிட்டதால் எவரும் காயமடையவில்லை. [உ-15]

## பாதயாத்திரையில் கம்யூ. கட்சி

தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகள் நடத்தி வரும் பாதயாத்திரையில் சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டனர்.

பாதயாத்திரை மாத்தறையைச் சென்றடைந்ததாக அறிவிக்கப்பட்டது. அப்போது 1988, 89 ஆம் ஆண்டுகளில் காணமற்போனவர்களின் உறவினர்களும் பெரும் எண்ணிக்கையில் பாதயாத்திரையில் சேர்ந்து கொண்டனர்.

[அ-10]

## நாடாளு..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தைக் கலைக்கக் கோரும் பிரேரணை குறித்து முதலில் ஆராயப்பட்டதாகவும் தெரிகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் பல முறைகேடுகள் நடைபெற்றதாக தேர்தல் ஆணையாளர் தமது அறிக்கையில் கூறியிருப்பதால், முறைப்படி தெரிவு செய்யப்படாத நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்த வேண்டும் என்பதே எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[அ-10]

## இலங்கையின்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கச்சதீவுக்கு அருகில் தமிழக மீனவர் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டை இலங்கை கடற்படைத்தளபதியர் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ மறுத்ததும்—

இந்திய — ஸ்ரீலங்கா நல்லுறவைக் கெடுக்க விடுதலைப் புலிகள் இராணுவ சீருடையில் சென்று இத் தாக்குதலை நடத்துவதாக அவர் காரணம் தெரிவித்ததும்—தெரிந்தவையே.

[இ-த]

## எயிட்ஸ்.,

[ ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆராய்ச்சியாளர் பிலிப் ஜோன்சன் கண்டுபிடித்துள்ளார்.

மனித ''எச்.ஐ.வி.'' வைரசும், குரங்குகளின் ''எஸ். ஐ. வி.'' வைரசும், அனேகமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவையாகும்.

எனினும்—

தாம் கண்டுபிடித்த தடுப்பூசியில் குரங்குகளைப் பாதுகாக்கும் வஸ்து எது என்பதை சரியாகப் பகுத்தாயும் வரை மனித ''எச். ஐ விக்கு'' எதிரான தடுப்பூசியைக் கண்டு பிடிப்பதற்கு கால தாமதம் ஏற்படலாம் என்று பேராசிரியர் ஜோன்சன் அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

குரங்குகளுக்கெனக் கண்டு பிடிக்கப்பட்ட தடுப்பூசி பதப்படுத்தப்பட்ட வைரசைக் கொண்டே தயாரிக்கப்பட்டதாகும்.

[அ]

## பிக்குகள் குழு வடக்கே விஜயம்: கோட்டே விகாராதிபதி எதிர்ப்பு

வணக்கத்துக்குரிய சித்தார்த்த தேரர் தலைமையிலான பௌத்த பிக்குகள் குழு ஒன்று வடபகுதிக்குச் செல்ல முடிவு செய்திருப்பதற்கு கோட்டே நாக விகாராதிபதி மாதுருவாவே சோபித தேரோ கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

பௌத்த பிக்குகளையும் சிங்கள மக்களையும் கொலை செய்தவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதா என்று அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார். பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

மல்வத்தை மகாநாயக்க தேரர் வடபகுதியில் இராணுவ பங்கருக்குச் சென்றதும் இராணுவத்தினருக்கு ஆசீர்வாதம் வழங்கியதும் பௌத்த தர்மத்துக்கு விரோதமான நடவடிக்கை எனக் கூறப்படுவது பற்றி கருத்துக் கேட்டபோது—

''மகாநாயக்க தேரர் மட்டுமன்றி எந்த பௌத்த குருவும் தாம் செல்லும் இடங்களில் ஆசீர்வாதம் வழங்குவது வழக்கம். தற்போதைய யுத்தத்தால் இராணுவமும் மக்கள் துன்பப்படுவதால் யுத்தம் விரைவில் முடிவுக்கு வந்து சமாதானம் தோன்ற வேண்டும் என்பதற்காகவே அவர் ஆசீர்வாதம் வழங்கினார்'' என்று சோபித தேரர் பதிலளித்தார்.

[உ-10]

## ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல்கள் ஈரானுக்கு விற்பனை

மாஸ்கோ, மார்ச் 29

ரஷ்யா தன்னிடமுள்ள 3 நீர்மூழ்கிக் கப்பல்களை ஈரானுக்கு விற்பனை செய்ய உள்ளது.

வெளிநாட்டுப் பொருளாதார உறவுகள் அமைச்சு இது தொடர்பான பேச்சுக்களை நடத்தி முடிவு செய்திருப்பதாக ரஷ்ய தொலைக்காட்சி அறிவித்தது.

இவ் விற்பனை பற்றி கடற்படைத் தளபதி முன்னர் மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.


யாழ்ப்பாணம்
மாவட்டக் கூட்டுறவுச் சபை (வரைவுள்ளது)

## பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| பதவி: | காரியாலய உதவியாளர் |
| கல்வித் தகைமை: | 5 ஆம் வகுப்பில் சித்தியுடன் கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட பதவியில் ஒரு வருடத்துக்கு குறையாத அனுபவம், அல்லது 8 ஆம் வகுப்பில் சித்தி |
| சம்பளம்; | குறியீட்டு இல 16 700 — 950 / 15/10, 20/5 |
| வயதெல்லை: | 18 — 40 வருடம் |

விண்ணப்ப முடிவு திகதி: **09-04-1992**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி;
செயலாளர்,
யாழ். மா. கூ. சபை,
இல. 15, சிறாம்பியடி லேன்,
யாழ்ப்பாணம்.

[சி/1749]


## மரண அறிவித்தல்

### திருமதி பகவதி ஐயாத்துரை

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பைச் சேர்ந்த திருமதி பகவதி ஐயாத்துரை வெள்ளி [27-3-92] அதிகாலை சிவபதம் அடைந்து விட்டார். அன்னார் காலஞ் சென்ற திரு. V. T. ஐயாத்துரையின் [முன்னாள் சுகாதார பரிசோதகர்] அன்பு மனைவியும், காலஞ் சென்ற திரு. திருமதி அ. கந்தையாவின் சிரேஷ்ட புத்திரியும், உசனைச் சேர்ந்த காலஞ் சென்ற திரு. திருமதி திருவேனியின் அன்பு மருமகளும், கணேசன், குலேந்திரன், ராஜேந்திரன் [Good will], அருந்ததி, சந்திரபூபதி ராஜேஸ்வரி, ஜெகதீசன், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராஜா, ராமச்சந்திரன், ஸ்ரீகுமார், ஆனந்தநடராஜா, ஜெயராணி, மகேஸ்வரி, ராஜேஸ்வரி, கல்யாணி ஆகியோரின் மாமியாரும், இராமலிங்கம், கனகசுந்தரம், லீலாவதி, தனபாலசிங்கம், பூங்கோதை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற முதியாப்பிள்ளை, A. K. சபாரட்ணம், சரஸ்வதி, அமராவதி, காங்கேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ் சென்ற சுப்பிரமணியம், நடராஜா, கண்மணி ஆகியோரின் அன்பு மாமியும், வாகீசன், வாதுலன், வான்மதி, கோகுலன், துர்க்கா, நிஸ்யந்தன், அரவிந்தன், ரமணன், பரதன், மயூரன், லக்ஷ்மி, பிரபா, ஸ்ரீகிருஷ்ணா, கீதா, மேனகா, யமுனா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (29-3-92) மாலை 3-00 மணிக்கு வீட்டில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

''கணேசபதி''
கந்தையா வீதி,
சாவகச்சேரி.
(20279)

தகவல்;
A. கணேசன்
[மகன்]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/1 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org